**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 05.09.2023**

| | |
|---|---|
| **Name : நித்யா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 –3 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>முதல் விசாரணை</u>

1) நான் கோயம்புத்தூரில் குடியிருந்து தபால் துறையில் வேலை செய்கிறேன். அ.சா.1 வினுபிரியாவை எனக்கு தெரியாது. 1–ம் எதிரி மட்டும் எனக்கு தெரியும். மற்ற எதிரிகள் எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. 1–ம் எதிரி நான் தபால் கொண்டு செல்லும் போது அவர் ஐஜி ஆபிசில் வேலை செய்தபோது தெரியும். மற்றபடி அவரை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) நான் ஐஜி அலுவலகத்திற்கு தபால் கொண்டு போகும் போது, 1–ம் எதிரி கோவிந்தனை பார்த்த வகையில் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் 6 மாதம் பழகினேன். கடந்த 2021–ம் வருடம் நவம்பர் மாதம் எனது பெற்றோர்கள் வேலைக்கு சென்ற சமயத்தில் கோவிந்தன் எனக்கு போன் செய்தாரா என்றால்

இல்லை. பிறகு கோவிந்தன் என்னுடன் உடலுறவு வைத்துகொள்ள சொன்னதன் பேரில் நான் அவருடன் உடலுறவு வைத்துக்கொண்டேன் என்றால் இல்லை. இதனால் நான் கர்பம் ஆனேன் என்றால் இல்லை. பிறகு இருவரும் மருதமலை முருகன் கோவிலில் வைத்து தாலி கட்டி திருமணம் செய்து கொண்டோம் என்றால் இல்லை. 1–ம் எதிரி ஏற்கனவே திருமணம் ஆனவர் என்பது தெரியாமல் அவரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் இல்லை. கடந்த 14.02.2022–ம் தேதி எனது பெற்றோர்கள் வரவேற்பு விழா நடத்தினார்கள் என்றால் இல்லை. எனக்கு புளியங்குளம் மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது என்றால் ஆமாம். அந்த ஆண் குழந்தைக்கு யார் தகப்பன் என்றால் (சாட்சி சொல்ல மறுக்கிறார்). பிறகு 19.10.2022–ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு இருந்தது தெரியவந்தது என்றால் அவ்வாறு இல்லை. 1–ம் எதிரியை நான் திருமணம் செய்து கொண்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 05.09.2023**

| | |
|---|---|
| **Name : லோகேஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 –3 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குக்கல்பட்டியில் குடியிருந்து தறி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். அ.சா.1 வினுபிரியாவை எனக்கு தங்கை ஆவார். எனது தங்கைக்கும் 1–ம் எதிரிக்கும் 2016–ம் வருடம் காதல் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்களுக்கு 1 மகன், 1 மகள் உள்ளார்கள். 1–ம் எதிரி திருமணத்திற்கு பிறகு காவல் துறையில் கோயம்புத்தூரில் வேலையில் இருந்தார்.

2) பிறகு 1–ம் எதிரி சேலம் ஆயுதபடைப்பிரிவில் வேலை செய்து வந்தார். அ.சா.1 அடிக்கடி 1–ம் எதிரிக்கு போன் வருவதை பார்த்து சந்தேகப்பட்டு எடுத்து பேசியபோது, இடையில் நித்யா என்ற பெண்ணை 2வது திருமணம் செய்து அவர்கள் இருவருக்கும் ஆண் குழந்தை உள்ளதாக தெரிந்துகொண்டு என்னிடம் தெரிவித்தார்.

3) இது சம்மந்தமாக எனது தங்கை 1–ம் எதிரி தொலை பேசிக்கு 1–ம் எதிரியும் நித்யாவும் திருமணம் செய்த திருமண புகைப்படம் பார்த்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னிடம் முதல் திருமணத்தை மறைத்து இரண்டாவதாக வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டது சொல்லி அழுதார். அப்போது,

எனது தங்கை 1–ம் எதிரி இதுபற்றி கேட்டபோது, வெளியே சொன்னார் கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள். 1–ம் எதிரியின் பெற்றோர்களான ரவி மற்றும் புவனா இருரிடமும் இது பற்றி கேட்டபோது, அவர்கள் இருவரும் உனது தங்கைக்கு வரதட்சனை கொடுக்காததால் இரண்டாவதாக திருமணம் செய்ததாக தெரிவித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர். 2, 3–ம் எதிரிகள் தான் 1–ம் எதிரியின் பெற்றோர்கள் ஆவார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 05.09.2023**

| | |
|---|---|
| **Name : செல்வி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 –3 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குக்கல்பட்டியில் குடியிருந்து சத்துணவு ஊழியாராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். அ.சா.1 வினுபிரியாவை எனக்கு மகள் ஆவார். 1–ம் எதிரிக்கும் எனது மகளுக்கும் 2016–ம் வருடம் இருவரும் காதல் திருமணம் ஒரு கோவிலில் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்களுக்கு 1 மகன், 1 மகள் உள்ளார்கள். 1–ம் எதிரி திருமணத்திற்கு பிறகு காவல் துறையில் கோயம்புத்தூரில் வேலையில் இருந்தார். 1–ம் எதிரி எனது மாப்பிள்ளை ஆவார்.

2) கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக, பிறகு 1–ம் எதிரி சேலம் ஆயுதபடைப்பிரிவில் வேலை செய்து வந்தார். அ.சா.1 அடிக்கடி 1–ம் எதிரிக்கு போன் வருவதை பார்த்து சந்தேகப்பட்டு எடுத்து பேசியபோது, கோயம்புத்தூரில் நித்யா என்ற பெண்னை 2வது திருமணம் செய்து அவர்கள் இருவருக்கும் ஆண் குழந்தை உள்ளதாக தெரிந்துகொண்டு என்னிடம் தெரிவித்தார். 2, 3–ம் எதிரிகள் தான் 1–ம் எதிரியின் பெற்றோர்கள் ஆவார்கள்.

3) அ.சா.1 என்னிடம் முதல் திருமணத்தை மறைத்து இரண்டாவதாக வேறு பெண்னை திருமணம் செய்து கொண்டது சொல்லி அழுதார். 1–ம் எதிரியின்

பெற்றோர்களான ரவி மற்றும் புவனா இருரிடமும் எனது மகள் பற்றி கேட்டபோது, சீர்வரிசை எதுவும் கொடுக்காததால் இரண்டாவதாக திருமணம் செய்ததாக தெரிவித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**